**தலைப்பு 120 – சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 217 | சிறுவர் பராமரிப்பு மற்றும் நலன்புரி சேவைகள் திணைக்களம் |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினதும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அந்த அமைச்சினதும் திணைக்களத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 120 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு | 2015.09.30 |
| 217 | சிறுவர் பராமரிப்பு மற்றும் நலன்புரி சேவைகள் திணைக்களம் | 2015.07.29 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,279.90 மில்லியனான மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 2,079.57 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதிஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 193.97 மில்லியன்

மற்றும் ரூபா 6.36 மில்லியன் அதாவது தேறிய நிதிஏற்பாட்டில் 9.53 சதவீதம் மற்றும் 2.59 சதவீதம் ஆக இருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 120 | 2,034.35 | 1,840.38 | 193.97 | 9.53 |
| 217 | 245.55 | 239.19 | 6.36 | 2.59 |
| மொத்தம் | **2,279.90** | **2,079.57** | **200.33** | 8.79 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்கும் அதன் கீழுள்ள திணைக்களத்திற்கும் உரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12001 | 26.0 | 16.6 | 8.0 | 15.5 | 80.0 | 54.5 |
| 21701 | 12.0 | 8.9 | 7.0 | 9.0 | 75.0 | 38.8 |

**2.3 கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 8.49 மில்லியன் கூட்டுத்தொகையாக இருந்ததுடன் திணைக்களத்தில் அத்திகதியில் மீதியொன்று காணப்படவில்லை.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் மொத்தம் ரூபா 2.12 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அமைச்சு/திணைக்களம் | வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0033/000 | 1.81 |
| மேற்படி | 6000/0000/00/0006/0079/000 | 0.31 |
| | | ---------- |
| மொத்தம் | | 2.12 |
| | | ===== |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினதும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும்

முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 120 – சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் இலக்க வழிகாட்டி |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பெண்களைத் துன்புறுத்துதல் மற்றும் சிறுவர்களை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக ரூபா 6,072,137 தொகை செலவில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள், அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை உள்ளடக்கிய விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 5 வருடங்களுக்கு அனுராதபுரம் சுற்றுலா விடுதி வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதிக்காக விடுதிக்கு வாடகையாக ரூபா 5,256,428 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015

செப்தெம்பர் 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போதும் 2012 ஆம் ஆண்டின் போதும் நடாத்தப்பட்ட 2 விழாக்கள் மற்றும் 4 பொருள் மெய்மையாய்வுகளுக்கு சமூகமளித்த 23 உத்தியோகத்தர்களுக்கு அதில் தங்குமிடம் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் படி 2011, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தங்குமிடங்களைப் பெற்ற உத்தியோகத்தர்களின் பெயர்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்**

**--------------------------------------------------------------------------------**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 11 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 ஒக்தோபர் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 50,873,885 ஆகும்.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**---------------------------------**

**3.4.1 பாதீட்டு முரண்கள்**

**-----------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 32,475,000 கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 11 செலவின விடயங்களுக்கு ரூபா 94,268,232 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 31 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.5 கட்டுநிதிக் கணக்குகள்**

---

நிதிப் பிரமாணம் 371 இன் படி செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாக பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 18 சந்தார்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 130,207 கூட்டுத்தொகையான உபகட்டுநிதி செயற்பாடு முடிவடைந்து 01 மாதம் முதல் 07 மாதங்கள் வரையிலான காலவீச்சில் தீர்க்கப்பட்டிருந்தது.

**3.6 அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

12001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2013 திசெம்பர் 31 ஆந் திகதி இடர் கடனுக்காக வழங்கப்பட்ட ரூபா 2,962,350 கூட்டுத்தொகையான 19 காசோலைகள் 03 மாதம் முதல் 06 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனால் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த (கணிப்பிடப்பட்ட) ரூபா 45,705 தொகையான கடன் வட்டியை அரசாங்கம் இழந்திருந்தது.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

அமைச்சிற்குச் சொந்தமான 6 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு 01 மாதம் முதல் 10 மாதங்களுக்கிடையிலான காலம் கடந்திருந்ததுடன் ஒரு வாகனத்தைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக கராஜிற்கு 2015 மார்ச் மாதத்தின் போது

கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வாகனம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மாார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சால் 2015 மே 21 ஆந் திகதி முதல் யூலை 30 ஆந் திகதி வரை 02 மாதங்கள் தாமதித்து அந்தப் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மெய்மையாய்வுச் சபை சுட்டிக்காட்டியிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சிற்குச் சொந்தமாக இருந்த மூடப்பட்டுள்ள ஆலோசனை நிலையம், முதியோர் நிலையம் மற்றும் தலைமை அலுவலகத்தில் அகற்றப்பட வேண்டியதாகச் சிபாரிசு செய்யப்பட்ட கணிசமான பொருட்கள் 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

அமைச்சால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,077,573 ஆகும்.

## 3.8 இணங்காமைகள்

-----------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 128(1)(அ) | 133,950 | அமைச்சின் கேட்போர் கூட்டத்தில் நடாத்தக்கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வெளியிலுள்ள பயிற்சி நிலையமொன்றால் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 272(3) | 319,558,592 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 06 வாரங்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2015 யூலை 30 ஆந் திகதியிலேயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 165(1), 185(2) மற்றும் 186 | 1,839,236 | பெறப்படுகின்ற சகல பணமும் பணத்தைக் கையேற்கின்ற உத்தியோகத்தருக்குக் கிடைத்த திகதியின் போது காசுப்புத்தகத்திலும் அதற்காக குறிப்பிடப்பட்ட ஏடுகளிலும் பதிய வேண்டியிருந்ததுடன் பணம் கிடைத்த திகதி முதல் 07 நாட்களிலிருந்து 28 நாட்கள் வரையிலான காலதாமதத்தின் பின்னர் கணக்கீடு செய்தல் மற்றும் வங்கியிலிடல் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (iv) | நிதிப் பிரமாணம் 168(1), 169 மற்றும் 184 | - | அரசாங்கத்திற்காக ஏதாவது பணமொன்று கிடைத்ததும் உரிய மாதிரிப் படிவத்தில் இயந்திரத்தில் பொறிக்கப்பட்ட இலக்கத்துடன் பற்றுச்சீட்டொன்று வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் பணத்தைப் பொறுப்பேற்று பற்றுச்சீட்டு வழங்கப்படாமல் புத்தகங்களில் வைப்பதற்கு இடமளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கணிசமாகக் காணப்பட்டன. |
| (v) | நிதிப் பிரமாணம் 340(1) மற்றும் 342(1) | - | திறைசேரியிலிருந்து பெறப்பட்ட அடியிதழ் புத்தகங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உரிய பிரகாரம் கையாளப்பட வேண்டிய போதிலும் புத்தகங்களை விநியோகிக்கும் போது தொடர் இலக்க ஒழுங்கு முறையில் விநியோகிக்கப்படாத 9 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (vi) | நிதிப் பிரமாணம் 341 | - | அடியிதழ் புத்தகங்களின் பெறுவனவு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைப் பதிந்து கொடுப்பதற்காக ஜீ.ஏ.என் 20 இன்படி பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (vii) நிதிப் பிரமாணம் - 342(6)(ஆ) | மீண்டும் பயன்படுத்த முடியாத பற்றுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும் பயன்படுத்தப்படாத 19 பற்றுச்சீட்டுக்களை உள்ளடக்கிய 2 அடியிதழ் புத்தகங்கள் காணப்பட்டன. |
| (viii) நிதிப் பிரமாணம் 343 - | பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத 4 அடியிதழ்கள் 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதியும் 2014 நவம்பர் 21 ஆந் திகதியும் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

--------------------------------------------

| | |
|---|---|
| 1998 திசெம்பர் 27 ஆந் 694,850 திகதிய 62/89 ஆம் இலக்க சுற்றறிக்கை | தினந்தோறும் செய்திப்பத்திரிகைகளில் ஒரு பிரதி வீதம் மும்மொழிகளிலும் ஆகக்குறைந்தது இரண்டு பத்திரிகைகள் கொள்வனவு செய்யப்படவேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது தினந்தோறும் 2 முதல் 30 வரையான பிரதிகள் வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

(இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

-------------------------------------------

| | |
|---|---|
| 2011 பெப்ரவரி 21 ஆந் 1,145,000 திகதிய 449 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநபர்களின்/ தனிப்பட்ட குழுவினது சேவையினைப் பெற்றுக் கொள்ளும் போது அந்த சேவைக்காக செலுத்தக்கூடிய ஆகக் கூடிய தொகை ரூபா 30,000 ஆக இருந்த போதிலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பெண்களுக்கெதிரான சகல |

செயற்பாடுகளையும் நிராகரிப்பதுடன் தெடர்புடைய விதிமுறைகள் (சீடோ) தொடர்பான அறிக்கையின் பிரிவுகளை தயாரிப்பதற்கு ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 80,000 வீதம் 12 உத்தியோகத்தர்களுக்கும் மேலும் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 185,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

**3.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படாது நிதியினை விடுவித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 2014 நவம்பர் 17 ஆந் திகதி கட்டளையிடப்பட்ட ரூபா 10,930,494 பெறுமதியான 439 தையல் இயந்திரங்களுக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்தினால் பொருட்கள் 2015 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களிலேயே விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 3,164,800 பெறுமதியான 86 தண்ணீர் பம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 76 பம்பிகள் கையேற்றப்பட்டமைக்கு பிரதேச செயலகங்களிலிருந்து உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்படாது பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அமைச்சின் கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2015 ஒக்தோபர் வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 9,944,393 பெறுமதியான காசோலை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்டிருந்தது. அந்தக் காசோலை 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதி கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 3,756,260 பெறுமதியான பெண் பிள்ளைகள் பாதுகாப்பு தொடர்பான சட்டக் கோவை மற்றும் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நியமங்கள் தொடர்பான 12,000 புத்தகங்களை 2015 நவம்பர் மாதம் வரையிலும் அரசாங்க அச்சகத் திணைக்களம் அச்சிட்டிருக்கவில்லை.

**3.10 செயலாற்றல்**

அமைச்சால் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த பிரதான செயற்பாடுகளில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்பள்ளி சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்காக பிரித்தானிய பவுண் 1,494,000 தொகை 2008 ஆம் ஆண்டின் போது சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திலிருந்து கிடைத்திருந்ததுடன் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 06 வருட காலம் கடந்ததன் பின்னர் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்காக அதிகாரச்சட்டத்தின் மூலம் ''முன்பள்ளி சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி'' எனப் பெயரிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்று உருவாக்கப்பட வேண்டியமை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திற்கு அமைச்சிற்குமிடையே ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அந்த நிதியத்தை உருவாக்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது.

(ii) சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திற்கு 2008 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்ட பிரித்தானிய பவுண் 1,494,000 தொகையைப் பயன்பாட்டிற்கு எடுக்கும் முறைமையொன்றாக அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 700 மில்லியன் நிதிஏற்பாடு மற்றும் கொடி விற்பனையிலிருந்து கிடைத்த நிதியைப் பயன்படுத்தி விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை மிகவும் ஆக்கபூர்வமானதாக அமுல்படுத்த வேண்டுமென 2014 சனவரி 24 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்திருந்தது. இருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது இதற்காகக் கிடைத்த ரூபா 600 மில்லியனில் ரூபா 537.38 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 70 மில்லியன் மீண்டும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) திட்டமிடல்

-----------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) பிரதேச செயலக மட்டத்தில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகினை தாபிப்பதற்காக ரூபா 9.5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டு 95 அலகுகளை தாபிப்பிதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 5.43 மில்லியன் செலவில் 34 அலகுகள் மாத்திரமே தாபிக்கப்பட்டிருந்தது.

(ii) ஆண் பெண் சமூக உறவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற துன்புறுத்தல்களை தவிர்க்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 0.5 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கி 5 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதன் கீழ் அமைச்சின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் மற்றும் மண்சரிவால்

இடப்பெயர்வுக்குள்ளானவர்களுக்கு உதவிகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) வெளிநாடு செல்லும் பெண்களின் பிள்ளைகள் தொடர்பாக மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு ரூபா 1.2 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த மெய்மையாய்வு வேறொரு அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையினால் இதற்காக வழங்கப்பட்ட ரூபா 0.418 மில்லியன் தொகை ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iv) மகளிர் தினத்திற்காக ரூபா 4.65 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 5.73 மில்லியன் அதாவது ரூபா 1.08 மில்லியன் தொகை மிகையாக செலவிடப்பட்டிருந்தது.

## 3.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

அமைச்சின் 2014 திசெம்பர் மாதத்திற்குத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **சீராக்கங்கள் தொடர்பான விபரங்கள்** | **காலப் பகுப்பாய்வு** | |
|---|---|---|
| | **06 மாதங்களுக்கு மேற்பட்டதும் 01 வருடத்திற்குக் குறைவானதும்** | **01 வருடத்திற்கு மேற்பட்டதும் 03 வருடங்களுக்குக் குறைவானதும்** |
| | **ரூபா** | **ரூபா** |
| (i) தேறாத வைப்புக்கள் | - | 20,644 |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | - | 461,440 |
| (iii) | இனங்காணப்படாத செலவுகள் | 401,928 | 106,682 |

**3.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) பிரதேச செயலகங்களின் பெறுவனவுக் கட்டளையின் பிரகாரம் 36 பாத்திரங்கள், 18 தாச்சிகள் மற்றும் எண்ணெய் பொழியும் இயந்திரம் என்பன அந்த அலுவலகத்தினால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் விநியோகக் கட்டளைகளில் அந்த பொருட்கள் விநியோகிக்கப்பட்டமை காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன நியமிக்கப்படாது 100 படகுகள் ரூபா 27,000,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்தப் படகு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட GI குழாய்களின் தடிப்பம் விலைமனுவில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் "லங்வா" இரும்பு பயன்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்ட படகுக்காக கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி காசோலை எழுதப்பட்டு பின்னர் 2014 திசெம்பர் 19 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினத்திற்காக அந்தப்பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சின் நோக்கங்களுக்கு உட்படாத 02 பத்திரிகை அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்கு ரூபா 998,500 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) சிறுவர் உறவு தொடர்பான தெற்காசிய அறிக்கை அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு கையளித்தல் தொடர்பாக வர்ண பக்கமொன்றை செய்திப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு ரூபா 448,280 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேலோங்கச் செய்வதற்காக கணிசமான செயற்பொறுப்புக்களில் அனேகமானவற்றை நிறைவேற்ற வேண்டி இருக்கும் போது சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் விழாவிற்கு ரூபா 2,419,032 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.15 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 06 ஆந் திகதி நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட விழாவொன்று இரத்துச் செய்யப்பட்டிருக்கும் போது அந்த விழாவின் போது பகிர்ந்தளிப்பதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 256,050 செலவில் 500 கைநூல்கள் அச்சிடப்பட்டிருந்தன. அதில் 70 புத்தகங்கள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 220,203 பெறுமதியான 430 புத்தகங்கள் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார வசதியீனங்களுடன் உள்ள குடும்பங்களின் பிள்ளைகள் மற்றும் சிறுநீரக நோய்கள் உள்ள 1891 பிள்ளைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது மாணவர் உதவி வழங்குவதற்காக ரூபா 11,694,000 பெறுமதியான 2 காசோலைகள் 2014 நவம்பர் 27 ஆந் திகதி தேசிய சேமிப்பு வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. வங்கி அந்தப் பணத்தை

மாற்றியிருந்த போதிலும் அந்தப் பணம் பிள்ளைகளின் கணக்குகளுக்கு 07 மாதங்கள் அளவிலான தாமதத்தின் பின்னா் 2015 யூலை மாதத்தின் போது செலவு வைக்கப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் 233 பாஸ் புத்தகங்கள் உரிய பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படாதிருந்ததுடன் ஏனைய பாஸ் புத்தகங்கள் நலனாளிகளின் பிள்ளைகளுக்கு கிடைத்தமைக்கான உறுதிப்படுத்தலும் பெறப்பட்டிருக்கவில்லை. இதன் படி 06 மாதங்களுக்குரிய அண்ணளவாக ரூபா 311,840 தொகையான வட்டியையும் அந்தப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு 2013 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 830,000 தொகை செலவில் 4 குறுந்திரைப்படங்களை உள்ளடக்கிய 10,000 டீவீடீ இறுவெட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தன. 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் அதில் 8,750 இறுவெட்டுக்கள் மகளிர் குழு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 700 டீவீடீ இறுவட்டுக்களை பிரதிசெய்வதற்காக ரூபா 70,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த இறுவெட்டுக்களை பகிர்ந்தளித்தல் தொடர்பான தெளிவான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற பகல் பராமரிப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக அந்த நலன்புரிச் சங்கத்தின் தலைவருடன் உடன்படிக்கையில் அமைச்சு கைச்சாத்திட்டிருந்தது. அதன் படி அதிகாரசபையின் தலைவரின் பெயருக்கு ரூபா 2,918,152 தொகையான காசோலையொன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்டு 2015 யூன் 30 ஆந் திகதி வரை அமைச்சில் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்தத் தொகை 2014 ஆம் ஆண்டின் செலவினமாக பதியப்பட்டிருந்ததுடன் அத்தொகை 2015 இன் செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2001 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அச்சிடப்பட்ட 742 புத்தகங்கள் மற்றும் 12 டீவீடீ இறுவெட்டுக்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் பல வருடகாலமாக மகளிர் பணியகத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது அச்சிடப்பட்ட ரூபா 36,800 பெறுமதியான 200 டீவீடீ இறுவெட்டுக்களும் ரூபா 230,940 பெறுமதியான 12,957 புத்தகங்களும், ரூபா 61,600 பெறுமதியான 1,600 கோவை உறைகளும், ரூபா 83,500 பெறுமதியான 18,050 துண்டுப்பிரசுரங்களும், ரூபா 31,000 பெறுமதியான 5,000 போஸ்டர்களும் 2015 நவம்பர் மாதம் வரையிலும் அமைச்சின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

## 3.16 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 24 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 12 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,423 | 1,113 | 310 |
| (iv) | ஆரம்ப நிலை | 68 | 64 | 04 |
| | மொத்தம் | 1,535 | 1,213 | 322 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 322 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 4. தலைப்பு 217 - சிறுவர் பராமரிப்பு மற்றும் நலன்புரி சேவைகள் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களாத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாகப்பட்டிருக்கவில்லை. |
| இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாகப்பட்டிருக்கவில்லை. |
| கொள்வனவு/ தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வரவுப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |

### 4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 4.2.1 பாதீட்டு முரண்கள்

09 செலவின விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து 30 சதவீதம் முதல் 96.5 சதவீதம் வரையிலான வீச்சில் ஏனைய செலவின விடயங்களுக்கு நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தது.

**4.2.2 ஏனைய அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

---

பல்வேறு செயற்பாடுகளுக்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 82.5 மில்லியன் நிதிஏற்பாடுகளில் ரூபா 70.1 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 12.4 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**4.2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

---

21701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

2014 ஏப்ரல் மாதத்தின் போது ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்ரின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த ரூபா 153,310 தொகையான கடன் மீதி தனிப்பட்ட கடன் மீதி வகைப்படுத்தலின் கீழ் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியாக காண்பிக்கப்பட்டிருக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற சொத்துக்கள்

---

திணைக்களத்திற்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 1 ½ வருடகாலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது விளைவற்று பரத்த பயிற்சி நிலையத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்களின் குறைவான பயன்பாடு

---

மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களுக்காக யுனிசெப் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 1,294,385 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

(இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2014 ஆம் ஆண்டின் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிபாரிசுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 இணங்காமைகள்**

---

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

---

திணைக்களத்திற்குச் சொந்தமான வான் வண்டி 2014 ஒக்தோபர் மாதத்தின் போது விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 103 மற்றும் 104 இன் பிரகாரம் பொலிஸ் அறிக்கை, ஆரம்பப் பரிசோதனை அறிக்கை, பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 செயலாற்றல்**

---

2014 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் படி பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(அ) "செவன சரண கெபகறு மாபிய கிராமிய" திட்டத்தின் கீழ் 125 சிறுவர்களுக்கு ரூபா 281 மில்லியன் தொகையான மானிய நலன்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 71 சிறுவர்களுக்கு ரூபா

248 மில்லியன் தொகையான மானியங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 50 லமா மித்துறு சத்துட்டு நிலையங்களுக்கு ரூபா 800,000 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 4 நிலையங்கள் மாத்திரம் ரூபா 775,000 செலவில் தாபிக்கப்பட்டிருந்தன.

(இ) சிறுவர் அபிவிருத்திக்கான ஊடக செயலமர்வு மற்றும் வெளியீடுகளிற்காக 20 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தவதற்கு ரூபா 500,000 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி 10 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஈ) 2 திணைக்கள நாளிதழ்களை தயாரிப்பதற்கு ரூபா 500,000 தொகை நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 461,000 தொகை பயன்படுத்தப்பட்டு ஒரு நாளிதழ் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தது.

(உ) அபாயங்களை எதிர்கொள்ளும் சிறுவர்களை இனங்காணும் கணிப்பீடொன்றை நடாத்தவதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையான நிதிஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாற்றுவழி பாதுகாப்பு கொள்கையைத் தயாரிப்பதற்காக ரூபா 50,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) கிராமிய மட்டத்தில் சிறுவர் உரிமைக் குழுக்களை நடாத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 300,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 249,000 தொகை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இணையம் மற்றும் இணைத்தல் நடவடிக்கைகளுக்கு ரூபா 50,000 தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 6 | 2 | 4 |
| (ii) | மூன்றாம் நிலை | 240 | 236 | 4 |
| (iii) | இரண்டாம் நிலை | 224 | 170 | 54 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 13 | 4 |
| | மொத்தம் | 487 | 421 | 66 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 66 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.